(ஆ) வேலூருக்கு அருகில் பட்டுக்கோட்டை அழகிரி பேருந்திற்குள் சிலர் தீப்பந்தம் வீசி சேதம் ஏற்படுத்தியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்தின்மீது சிலர் தீப்பந்தம் வீசி, அந்தப் பேருந்துக்கு சேதம் உண்டாக்க முயற்சித்து, (குறுக்கீடு) அங்கே இருந்த பயணிகள் பலர் தீக்காயத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று டாக்டர் ஜெ. பரந்தாமன், திரு .சி. ஞானசேகரன், திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் (குறுக்கீடு) ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்)

அந்தப் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். திரு. பரந்தாமன். (குறுக்கீடு)

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

3. தகவல் கோரல்.

பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இன்னொரு பிரச்சினையை எடுத்திருக்கிறேன். இன்னொரு உறுப்பினருடைய உரிமையைப் பறிக்கக்கூடாது. ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என்று கூறி, ஒருசில உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு, என்னிடம் எதுவும் கொடுக்காமல், இப்போதுதான் உள்ளே வந்து, எழுப்புகிறீர்கள். (குறுக்கீடு) மிக முக்கியமானதொரு பிரச்சினையை எழுப்புவதற்கு என்னிடம் சிலர் அனுமதி கேட்டு, நான் அனுமதி வழங்கி இருக்கிறேன். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு, தினசரி இந்த மாதிரி நடந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) நீங்கள் தாமதமாக வருவது, நான் ஸ்பெஷல் மென்ஷன் ஒன்றை எடுத்துக்கொண்டிருக்கின்றபோது, இந்த மாதிரிச் செய்வதை நான் அனுமதிப்பது இல்லை. (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, உட்கார வேண்டும். (குறுக்கீடு) அதற்குப் பதில் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) என்னிடம் எதுவும் சொல்லவில்லை. என்னிடம் எதுவும் சொல்லாமல், இன்னொரு ஸ்பெஷல் மென்ஷனை நான் எடுக்கின்றபோது, இந்த மாதிரிச் செய்தால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் எதுவும் சொல்லாமல் எழுப்புவது முறையல்ல. இன்னொரு பிரச்சினையை ஜீரோ ஹவரில் எடுக்கும்போது, இன்னொரு உறுப்பினருடைய உரிமையை

நீங்கள் பறிப்பது எப்படி நியாயம்? (குறுக்கீடு) இன்னொரு உறுப்பினருடைய பிரச்சினையை நான் எடுக்கும்போது, இந்தமாதிரி இடையூறு செய்யக்கூடாது. (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு, நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடு) என்னிடம் கொடுத்திருக்கிறீர்களா? அனுமதி, கேட்டிருக்கிறீர்களா? என்ன வேண்டுமானாலும் நீங்கள் கிளப்ப முடியாது. (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு)

(திரு. எஸ். திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார்)

திரு. இளம்வழுதி, நீங்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறீர்கள். கடைசியில் சொல்லலாம், இது முடியட்டும்.

2. சிறப்புக் கவன ஈர்ப்பு — தொடர்ச்சி

(ஆ) வேலூருக்கு அருகில் பட்டுக்கோட்டை அழகிரி பேருந்திற்குள் சிலர் தீப்பந்தம் வீசி சேதம் ஏற்படுத்தியது குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதிக்கு அடுத்த தொகுதியான அணைக்கட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கி. தருமலிங்கம் நேற்று, 5.4.94 அன்று இரவு 9 மணி அளவில் சென்னையிலிருந்து அவருடைய சொந்த ஊரான ஒடுகத்தூருக்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் செய்தபோது, மலைக்கொடி மற்றும் உசீர் என்ற இடம் அருகே வெளியில் இருந்து சமூக விரோதிகள் சிலர் ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸின்மேல் வெடிக்கும் பொருள்களை வீசி, அது வெடித்த காரணத்தால், பேருந்தில் தீப்பந்தம் போன்ற பொருள் விழுந்து, பயணம் செய்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கி. தருமலிங்கம் உட்பட சுமார் 26 பேர் காயமுற்றனர். பலருக்குத் தீக்காயம் ஏற்பட்டது. இதில் இன்று காலையிலே இருவர் இறந்துவிட்டனர். மூவர் மிக அபாய நிலையில் உள்ளனர். பயணம் செய்த சட்டமன்ற உறுப்பினருக்கு வலது கையில் எலும்பு முறிவும், முதுகு எலும்பு, மார்பு எலும்பில் காயமும் ஏற்பட்டிருக்கிறது. இவர்களில் சட்டமன்ற உறுப்பினர் மட்டுமே அம்மாவின் அருளால் தீக்காயத்திலிருந்து தப்பியவர்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. கி. தருமலிங்கம் உட்பட அனைவரையும் வேலூர் அரசு மாவட்ட மருத்துவ மனையில் நேரில் சென்று பார்த்து, மருத்துவப் பணி இயக்குநர், மருத்துவ அலுவலர்கள், செவிலியர் ஆகியோர் இரவு நேரத்தில் மிகச் சிறப்பாக, காயம் அடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி அளித்ததைப் பார்த்தேன். மேலும் உதவிட வேண்டிக் கேட்டுக் கொண்டேன். இந்த வெடி விபத்தின் உள் நோக்கம் ஆராயப்பட்டதா? டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில்

அமைதியாக இருக்கின்ற, அமைதிப் பூங்காவாக இருக்கின்ற தமிழகத்தில் செயற்கைப் பிரச்சினைகளை ஏற்படுத்தி, சதி வலை பின்னப்படுகிறதா? திட்டமிட்ட சதியாக இது இருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன். பேருந்தில் பயணம் செய்கின்ற பயணிகளுக்கு அபாயம் ஏற்படாத வண்ணம் அனைத்து ஏற்பாடுகளையும் மிகச் சிறப்பாகச் செய்துள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்து, எதிர்பாராத விபத்தினால் அனாதைகள் ஆகிவிடுகிற அனைவருக்கும் கருணையுடன் உதவிடும் நமது முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பேருந்து விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையும், அபாய நிலையில் உள்ளவர்களுக்கு வேண்டிய சிறப்பு மருத்துவ சிகிச்சையும் அளித்து, உதவித் தொகையும் வழங்க கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் உதவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11-40*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *5.4.94* இரவு *9.45* மணியளவில் வட' ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தின் தலைமை இடமான வேலூர் அருகே மலைக்கொடி மற்றும் உசீர் ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட நெடுஞ்சாலையில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத சில சமூக விரோத சக்திகள் சாலையில் சென்ற பேருந்தினை நிறுத்தியுள்ளனர். பந்து போன்று துணியை உருட்டி அதில் மண்ணெண்ணெயை ஊற்றி தீப்பந்தம் போல் எரிய வைத்து மூன்று தீப்பந்தங்களை வண்டிக்குள் வீசியிருக்கிறார்கள். ஒன்று ஓட்டுநர் அருகிலும், இன்னொன்று பேருந்தின் நடுப்பகுதியிலும், மற்றொன்றை பேருந்தின் பின்பகுதியிலும் வீசியிருப்பதாகத் தெரிகிறது. தீப்பந்தம் விழுந்ததால், பேருந்தின் ஓட்டுநர் நிலை தடுமாறி சாலையில் ஒரு பகுதியில் உள்ள மேடான பகுதியின்மீது மோதியுள்ளார். இந்தத் தீப்பந்தங்கள் எறியப்பட்டதால் அப்போது அந்தப் பேருந்தில் பயணம் செய்த *37* பேர்களில் *26* பேர்களுக்கு தீக்காயம் ஏற்பட்டுள்ளது. பயணம் செய்தவர்களில் ஒரு பெண்மணிக்கும் தீக்காயம் ஏற்பட்டுள்ளது. இதே பேருந்தில் பயணம் செய்த அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. கி. தருமலிங்கம் பேருந்திலிருந்து குதித்ததால் வலதுகை முறிவு ஏற்பட்டுள்ளது. அவருக்கு எந்தத் தீக்காயமும் ஏற்படவில்லை. தற்போது அவர் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அணைக்கட்டு கிராமத்தைச் சேர்ந்த நடராஜன் என்பவரின் மகன் நேதாஜி மற்றும் சுந்தரம் என்பவரின் மகன் செல்வம் ஆகிய

இரண்டு பேரும் தீக்காயங்கள் காரணமாக மரணம் அடைந்துள்ளார்கள். மேலும் ஒருவரின் நிலை சற்று கவலைக்கிடமாக உள்ளது. மற்ற பயணிகளுக்குத் தேவையான மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

வேலூர் தாலூக்கா காவல் நிலைய குற்ற எண் 243/94-ல் இந்திய தண்டனைச் சட்டம் 307 மற்றும் 435 ஆகிய பிரிவுகளின் கீழும், பொதுச் சொத்துக்களை நாசம் செய்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கும் சட்டத்தின் கீழும் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. பேருந்தினைப் பொறுத்தவரையில் தீயினால் பெருத்த சேதம் ஏற்படவில்லை. இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட சமூக விரோத சக்திகள் யார் என்பதைக் குறித்து காவல்துறையினர் புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று காலை 1.30 மணியளவில் சிதம்பரம் அருகே பெரியபேட்டையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து ஒன்றைச் சில சமூக விரோத சக்திகள் நிறுத்தி, பயணிகளைக் கீழே இறக்கிவிட்டு, பேருந்துக்குத் தீ வைத்துள்ளனர். இந்தப் பேருந்து முழுமையாக தீக்கிரையாகியது. இதில் பயணம் செய்த பயணிகளுக்கு எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. இதுகுறித்தும் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு காவல் துறையினரால் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதேபோல் திருத்தணி அருகே தனியார் பேருந்து ஒன்று சில சமூக விரோத சக்திகளால் முற்றிலும் தீயிடப்பட்டு, முற்றிலும் சேதமடைந்துள்ளது என்றும், இதுபோன்று பல்வேறு இடங்களில் மேலும் ஆறு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் கல்லெறிதல், தீ வைத்தல் போன்ற சம்பவங்களினால் சேதமடைந்துள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதுகுறித்து காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றார்கள். ஒரே இரவில் பல இடங்களில் ஏற்பட்டுள்ள சம்பவங்களை வைத்துப் பார்க்கும்போது சில சமூக விரோத சக்திகள் வேண்டுமென்றே பொதுமக்கள் மத்தியில் பீதியையும், கலக்கத்தையும் உண்டு பண்ணவேண்டுமென்ற எண்ணத்தில் செயல்பட்டிருக்கிறார்கள் என்று காவல் துறையினர் சந்தேகப்படுகின்றனர்.

தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை விரைவில் காவல்துறையினர் கண்டுபிடித்துவிடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் செயல்களைச் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது குறித்து நம்மிடையே எந்தக் கருத்து வேறுபாடும் இருக்கக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூரில் நடந்த இந்தத் துயரச் சம்பவத்தில் மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க

ஆணை இட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்தச் சம்பவத்தில் கடுமையான தீக்காயம் அடைந்தவர்களுக்கு ஐயாயிரம் ரூபாயும், சாதாரணக் காயம் அடைந்தவர்களுக்கு 2,500 ரூபாயும் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.

முற்பகல் 11.45

திரு. இளம்வழுதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி, நான் சொல்லிவிடுகிறேன். **

திரு. இளம்வழுதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

திரு. இளம்வழுதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

திரு. இளம்வழுதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** அவர் பேசியது எதுவுமே அவைக் குறிப்பில் இருக்காது. நான் சொன்னது உட்பட எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. உட்காருங்கள்.

3. விதி 110- ன் கீழ் முதல் அமைச்சரின் அறிக்கை.

கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரியிலிருந்து விலக்கு அளித்தல் மற்றும் நிதிநிலை அறிக்கையில் விற்பனை வரி விதிக்கப்பட்ட சில பொருட்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளித்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி நிறுவனங்கள் மீதான சொத்து வரி விதிப்பு தொடர்பாக அமைச்சரவை எடுத்த சில முடிவுகள் குறித்து பேரவைக்கு அறிவிக்க வேண்டும் என்று, பேரவை விதி 110-ன் கீழ் ஓர் அனுமதியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வழங்கி இருக்கிறேன். அந்த அறிவிப்பினை இப்போது பேரவைக்கு வைப்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகள், கல்லூரிகள் போன்ற கல்வி நிறுவனங்களின் மீது 1990 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த அன்றைய அரசு விதித்த சொத்து வரி குறித்தும், அதை வசூல் செய்வதில் ஏற்பட்ட சில பிரச்சினைகள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.